திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, திரு. கிட்டப்பா அவர்கள் கேட்ட விஷயம் மாதிரியல்ல இது. ரொம்ப நெருங்கிய விஷயம். அது பாயின்ட் நம்பர் ஒன். அந்து சேகரிக்க வேண்டுமென்று சொல்வது உண்மையல்ல. ஒரு ஹைகோர்ட்டு ஜட்ஜ்மெண்ட் கொடுத்து அரசாங்கத்தை டையரக்ட் பண்ணி இருக்கக்கூடிய விஷயம் அவர்களும் அட்மிட் செய்திருக்கிறார் கள். ஆகவே என்றைக்கோ நடந்த விஷயமல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர்கள் சேகரிக்க வேண்டுமென்று சொன்னது புதிதாகச் சேகரிக்க வேண்டும் என்பது அல்ல, அந்தக் கேள்விக்கு இலாகா மூலமாகத்தான் பதில் சேகரித் துக் கொண்டுவர முடியும். நீங்கள் கேட்கிற தகவலை இலா காவிடம் கேட்டுச் சொல்கிறேன் என்றுதான் சொல்கிறார். மாயூரம் அப்படி அல்ல, நேற்று நடந்த நிகழ்ச்சி. அது அமைச்ச ரின் கவனத்திற்கு வந்திருக்கிறது. எனவே அதற்கும் இதற்கும் சம்பந்தப்படுத்துவது சரியல்ல.

திரு கூத்தகுடி ச. சண்முகம்: தலைவரவர்களே, தலைவர வர்கள் சொன்னது சரியா இருக்கலாம். இடைவெளி வந் தால் பிரச்சினை ஏற்படுகிறது. எங்கேயோ இழுத்துச் செல்லப் படும் என்பது உங்களுக்கும் தெரியும். ஆகவே, கேள்வி நேரத்தில் அப்படிப்பட்ட இடைவெளிக்குச் சந்தர்ப்பம் கொடுக் காமல் இருப்பது நல்லது என்ற ஆலோசனையைத் தலைவரவர் களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கைத்தறித் துணிகள் தேக்கம்.

*வினா எண் 478— திரு கு. ரமணி : மாண்புமிகு கைத்தறி பஞ்சாலைகள் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கோயம்புத்தூரைச் சுற்றிலுமுள்ள ஏராளமான கூட் டுறவு நெசவாளர் சங்கங்களில் துணி தேக்கத்தால் நெசவாளர் கள் சுமார் 20,000 பேர் வேலையற்றியிருக்கிறார்களா?

(ஆ) ஆம் எனில், அதன் மேல் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்: (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

*திரு வினா எண் 479—வி. கே. கோதண்டராமன், திரு என். கிட்டப்பா: மாண்புமிகு கைத்தறி பஞ்சாலைகள் துறை அமைச் சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

25 கோடி ரூபாய் மதிப்புள்ள கைத்தறி துணி தேங்கியுள்ளது பற்றி தமிழக அரசு என்னென்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

1979 மார்ச் 22]

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்: தலைவரவர்களே, பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களிலும் மாநிலச் சங்கங்களிலும் தேங்கிக் கிடந்த கைத்தறித் துணிகள் விற்பனைக்காக தமிழக அரசு மத்திய அரசு உதவியுடன் தள்ளுபடி வழங்கிய காரணத்தினால் துணித் தேக்கம் தவிர்க்கப்பட்டது.

தற்பொழுது மாநிலச் சங்கம் மற்றும் இம்மாநிலத்திலுள்ள பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் .சரக்கு இருப்புத் தேக்கம் இல்லாமல் நல்லமுறையில் உள்ளது.

திரு கு. ரமணி: தலைவரவர்களே, அமைச்சரவர்கள், அப்படிப்பட்ட பிரச்சினையே இல்லை, கேள்விக்கு இடமில்லை என்று சொன்னார்கள். நான் இந்தக் கேள்வியை அனுப்பி கிட்டத்தட்ட ஒரு வருஷம் இருக்குமா என்று சந்தேகப்படுகிறேன். அன்றைக்கிருந்த சூழ்நிலையில் பல ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலையில்லாமல் போய்—துணித் தேக்கத்தினால் வேலையில்லாமல் போய்—கோவை சுக்கிரவாரப்பேட்டையில் மறியல் போராட்டம் நடந்து, பக்கத்தில் ஒண்டிப்புதூரில், திருப்பூரில் மறியல் போராட்டமே நடந்தது உண்டா இல்லையா? அப்பொழுது துணித் தேக்கம் ஏற்படவில்லையா? பிறகு வேண்டுமானால் நிலைமை மாறியிருக்கலாம். நாளைக்கு என்ன வரும் என்று சொல்லமுடியாது. இப்படிப்பட்ட நிலையில் இந்தக் கேள்வி எதுவும் எழுவில்லை என்று சொல்வது எப்படிச் சரியாகும்? அந்த விவரத்தைச் சொல்வார்களா?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்: தலைவரவர்களே, 31—1—1978 ஆம் தேதிய நிலவரப்படி கோவை மற்றும் இதைச் சுற்றியுள்ள இடங்களில் சுமார் 67·57 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள கைத்தறித் துணி தேக்கம் இருந்தது. தமிழகம் தழுவிய அளவில் சுமார் 25 கோடி ரூபாய் அளவுள்ள துணிகள் தேங்கியிருந்தன. இவ்வாறு துணித் தேக்கம் ஏற்பட்டதன் காரணமாக மத்திய அரசோடு தொடர்பு கொண்டு, 20 சதவீதம் சிறப்புத் தள்ளுபடி கொடுத்து அந்தத் ணித் தேக்கம் தவிர்க்கப்பட்டிருக்கிறது.

திரு வி.கே. கோதண்டராமன்: சார், கேள்வி கேட்ட நேரத்திலே தேங்கிக் கிடந்து, மத்திய அரசாங்கத்தின் அனுமதியைப்பெற்று 20 சதவீத கழிவோடு அது போயிருக்கலாம். வருஷா வருஷம் செத்து செத்து பிழைக்கக்கூடிய தன்மையிலே அது தேங்குவதும், மறுபடியும் அதை 20 சதவீதம், 30 சதவீதம் கழித்துக் கொடுக்கும் அடிப்படையிலே போவதுமாக இருக்கிறது. ஆகவே, இப்படிப்பட்ட சூழ்நிலையிலே கைத்தறி நெசவுத் தொழிலாளர்களுக்கு இன்றைய தினம் நூல் விலை உயர்ந்த காரணத்தினால், அவர்கள் செய்கின்ற வேலைவாய்ப்பையிழக்கும் காரணத்தினால்..

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்விக்கு வாருங்கள். இப்பொழுது தேங்கிக் கிடக்கவில்லை என்று அமைச்சரவர்கள் சொல்லி விட்டார்கள். இன்றைய நிலையில் பிரச்சினை இல்லை. தாங்கள் உட்கார்ந்தாலும் நல்லதுதான்.

திரு வி.கே. கோதண்டராமன்: அப்பொழுது கேட்ட கேள்விக்கு இப்பொழுது பதில் சொல்கிறார்கள். இன்றைக்கு அந்த நிலை இல்லை என்று. அந்த நெசவுத் தொழிலாளர்கள் வேலையில்லாமல், எற்கனவே வாங்கிவந்த கூலியை விட குறைத்துக் கிடைக்கும் சூழ்நிலையில் இருக்கிறார்கள் என்பது கனம் அமைச்சருக்குத் தெரியுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதோடு நில்லுங்கள்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்: பேரவைத் தலைவரவர்களே, இதுபோன்ற துணித் தேக்கத்தை தவிர்க்கும் பொருட்டு கோ ஆப்டெக்ஸ் துணி கொள்முதல் செய்வதை இப்பொழுது திருத்தி அமைத்திருக்கிறது. கோ ஆப் டெக்சின் துணி கொள்முதல் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சரக்குகள் குவியா வண்ணமிருக்க மாற்றியமைக்கப்பட்டுள்ளது. கோ ஆப்டெக்ஸ் மூன்று மாதங்களுக்கொருமுறை கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் பிரதிநிதிகளை நேரில் அழைத்து, விவாதித்து, எவ்விதத் துணிகளை உற்பத்தி செய்ய வேண்டுமென்பதற்கு ஒரு உற்பத்தித் திட்டம் தீட்டி, அந்த அடிப்படையில் உற்பத்தி செய்யப்படுகின்ற கைத்தறித் துணிகளைக் கொள்முதல் செய்ய ஏற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. இதனால் பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் அவற்றின் உற்பத்தியினை ஒழுங்குபடுத்திக் கொள்வதுடன் தேவையற்ற ரகங்களை உற்பத்தி செய்வதையும் தவிர்த்துக் கொள்ள முடியும். இதன் விளைவாக சரக்குத் தேக்கத்தைக் களைவதுடன் நெசவாளர்களுக்குத் தொடர்ந்த வேலை வாய்ப்பினையுந் தர முடியும். இந்த முறையில் இப்பொழுது கோ ஆப்டெக்ஸ் செயல் பட்டுக்கொண்டிருக்கிறது.

திரு என். கிட்டப்பா: தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் தற்பொழுது துணித் தேக்கம் இல்லை. கைத்தறித் துணித் தேக்கம் இல்லை என்று அறிவித்தார்கள், அது மகிழ்ச்சியடையக் கூடிய ஒன்று. இருந்தாலும் அடிக்கடி கைத்தறித் துணித் தேக்கம் ஏற்படுகிறது. 1952 ஆம் ஆண்டிலே பேரறிஞர் அண்ணா அவர்கள் கைத்தறித் துணித் தேக்கம் ஏற்பட்டு விட்டது, நெசவாளர்கள் நிலை பெரிதும் பாதிக்கப்பட்டு விட்டது என்ற காரணத்தினால் தானும், தன்னையொத்த டாக்டர் கலைஞர், பேராசிரியர் ஆகியோர்களுடனும்,— தாங்களே கூட அதிலே கலந்து கொண்டிருப்பீர்கள்—இன்றைய தினம் அந்தத் தரப்பிலே உள்ள பலரும், துணியைத் தோளில் தூக்கிக்கொண்டு விற்றிருக்கும் அந்த முறையைக் கையாள்வதற்கு முன்வருவார்களா?

1979 மார்ச் 22]

அந்த முறையைக் கையாண்டு அரசாங்கமே முன் வந்து கைத்தறி துணி தேங்குகின்ற நேரத்தில் மாண்புமிகு சபாநாயகர் தலைமையில், முதல்வர் அவர்கள், எதிர்க்கட்சித் தலைவர் எல்லோரையும், இதிலாவது எல்லோரையும் ஒன்றாகச் சேர்த்து, அந்தக் கைத்தறித் துணி தேக்கத்தை நீக்க அரசு ஆவன செய்ய முற்படுமா?

[முற்பகல் 10-00]

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்: பேரவைத் தலைவர் அவர்களே, அரசு இப்பொழுது எடுத்துக் கொண்டிருக்கிற முயற்சியின் விளைவாக அப்படிப்பட்ட ஒரு துணி தேக்கம் ஏற்படாது என்ற நம்பிக்கை அரசுக்கு இருக்கிறது; அதையும் மீறி அப்படிப்பட்ட ஒரு துணி தேக்கம் ஏற்படுமாயின் நிச்சயமாக மாண்புமிகு உறுப்பினரை விற்பனைக்கு அழைப்போம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உடுக்குறியிட்ட வினாக்கள் 520-539 வரை ஒத்திவைக்கப் பெறுகின்றன.

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்.

அரியலூர் தொகுதியில் கிராமச் சாலைகள் திட்டம்.

வினா 551—திரு. த. ஆறுமுகம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம், அரியலூர் தொகுதியில் இதுவரை கிராம சாலைகள் திட்டத்தில் எந்தெந்த சாலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன?

(ஆ) 1978-79-ஆம் ஆண்டில் எந்தெந்த சாலைகள் மேற்கொள்ளப்பட உள்ளது?

விடை—

(அ) 1976-77 வரை அரியலூர் தொகுதியில் அரியலூர் ஒன்றியத்தில் சுப்பராயபுரம் 9·60 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலையை மேம்பாடு செய்யும் திட்டம் ரூபாய் 7·37 இலட்சம் மதிப்பீட்டில் முடிக்கப்பட்டுள்ளது.

(ஆ) 1977-78-ல் எடுக்கப்பட்டுள்ள சாலைகள் :—

அரியலூர் ஒன்றியத்தில் 5 கி.மீ. நீளம் அரியலூர் கோவிந்தபுரம் சாலை மேம்பாடு செய்யும் திட்டம் ரூபாய் 3·58 இலட்சத்தில் மதிப்பீடு செய்யப்பட்டு வேலை முடியும் நிலையில் உள்ளது. அரியலூர் ஒன்றியத்தில் திருச்சி-சிதம்பரம் சாலையில் கி.மீ. 59/0லிருந்து இடையாத்தங்குடி செல்லும் 6·6 கி.மீ.